அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு

பிலவ வருடம் மார்கழி - தை ஜனவரி 2021 முரசு 15 ஒலி 170



**யாரே என்னினும் இரங்குகின்றார்க்குச்**
**சீரே அளிக்கும் சிதம்பர சிவமே!**
**பொய்ந்நெறி அனைத்தினும் புகுத்தாது எனைஅருட்**
**செந்நெறி செலுத்திய சிற்சபை சிவமே!**

– அருட்பெருஞ்ஜோதி அகவல்

பிரதி ஒன்றுக்கு ரூ.10/– ஆண்டு சந்தா ரூ. 120/–

# வடலூரில் தரிசிக்க வேண்டிய இடங்கள்

**விண்ணப்பம்**

பயம் துயர் உள்மருட்சியாதிய
இப்பகை எலாம் பற்றறத் தவிர்த்தே
நயந்தநின் அருளார் அமுதளித்து அடியேன்
நாடி ஈண்டு எண்ணிய எலாம்
வியந்திடத் தருதல்வேண்டும் ஈது எனது
விண்ணப்பம் நின் திருஉளத்தே
உயந்தரக் கருதித் தயது செய்து அருள்க
வள்ளலே சிற்சபை வாழ்வே

– திருஅருட்பா

**வள்ளல் பெருமான் பிறந்த இல்லம்**




**கருங்குழி – தண்ணீர் விளக்கு எரித்த இல்லம்**



**வள்ளல்பெருமான் உருவாக்கிய தீஞ்சுவை நீரோடை**



**வடலூர் தருமச்சாமலை**



**வடலூர் சத்திய ஞானசபை**




**வள்ளல்பெருமான் இறைவனுடன் இரண்டறக் கலந்த இல்லம் சித்தி வளாகம்**



## தெய்வத் தீந்தமிழ் திருஅருட்பா

அன்பு உள்ளங்களே! மனத்தை வேறு எந்தவித ஆபாசத்திலும் செல்லவொட்டாது இறைவனுடைய திருவடியிலேயே நிறுத்த வேண்டும் என்பது பெருமானார் அருளிய கரண ஒழுக்கமாகும். அதன்பொருட்டே இங்கு **அருட்பெருஞ்ஜோதி அகவல்** என்ற பதிகம் அளிக்கப்படுகின்றது. இதை நாளும் ஓதி பரம்பொருளின் திருவடியை நினைந்து உய்வடைவோமாக!

பொதுவுணர்வு உணரும்போது அலால் பிரித்தே
அதுவெனில் தோன்றா அருட்பெருஞ்ஜோதி
உளவினில் அறிந்தால் ஒழிய மற்றளக்கின்
அளவினில் அளவா அருட்பெருஞ்ஜோதி
என்னையும் பணிகொண்டு இறவா வரம்அளித்து
அன்னையில் உவந்த அருட்பெருஞ்ஜோதி
ஓதி ஓதாமல் உறவு எனக்குஅளித்த
ஆதியீறு இல்லா அருட்பெருஞ்ஜோதி
படிஅடி வான்முடி பற்றினும் தோற்றா
அடிமுடி எனும் ஓர் அருட்பெருஞ்ஜோதி
பவனத்தின் அண்டப் பரப்பின் எங்கெங்கும்
அவனுக்கு அவனாம் அருட்பெருஞ்ஜோதி
திவள்உற்ற அண்டத் திரளின் எங்கெங்கும்
அவளுக்கு அவளாம் அருட்பெருஞ்ஜோதி
மதன்உற்ற அண்ட வரைப்பின் எங்கெங்கும்
அதனுக்கு அதுவாம் அருட்பெருஞ்ஜோதி
எப்பாலுமாய் வெளிஎல்லாம் கடந்து மேல்
அப்பாலும் ஆகிய அருட்பெருஞ்ஜோதி
வல்லதாய் எல்லாம் ஆகி எல்லாமும்
அல்லதாய் விளங்கும் அருட்பெருஞ்ஜோதி
எப்பொருள் மெய்ப்பொருள் என்பர் மெய்கண்டோர்
அப்பொருள் ஆகிய அருட்பெருஞ்ஜோதி
தாங்கு அகிலாண்ட சராசர நிலைநின்று
ஆங்குற விளங்கும் அருட்பெருஞ்ஜோதி
சத்தர்கள் எல்லாம் தழைத்திட அகம்புறத்து
அத்திசை விளங்கும் அருட்பெருஞ்ஜோதி. 146



தங்கள் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்க, அமைதி நிரம்ப ஜோதி வழிபாட்டினை நாள்தோறும் செய்யுங்கள்.

**எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!**
**கொல்லா விரதம் குவலயமெல்லாம் ஓங்குக!**
**வள்ளல் மலரடி வாழ்க! வாழ்க!**

# அகவல் தரும் தகவல்



தயவுதிரு தாமல் கோ. சரவணன் அவர்கள், காஞ்சிபுரம்

இன்றைக்கு நாம் எல்லோரும் அடுத்த ஒரு நாளை நகர்த்திக் கொண்டே போகவேண்டும் என்பதற்காகவே ஏதோவொரு பணியில் இருக்கிறோம். அங்கே நாம் கொடுக்கும் உழைப்பிற்கேற்றபடி ஊதியம் வழங்கப்படுகிறது. அதனை நீங்கள் யாருக்கு செலவு செய்கிறீர்கள் என்று கேட்டால் நாம் என்ன சொல்வோம்? நமக்காகத்தான் என்போம். சரி, உங்களுக்கு என்றால் அந்த ஊதியம் உடலுக்கானதா உயிருக்கானதா என்ற மற்றுமோர் கேள்வி எழுப்பப்பட்டால் என்ன பதில் சொல்ல முடியும்? சம்பாதிக்கின்ற பணத்தினால் நாம் அணிகின்ற துணிகளும், தேடி வாங்குகின்ற நகைகளும், உண்ணுகின்ற உணவும், கேளிக்கைகளும், கொண்டாட்டங்களும் இந்த உடம்புக்கானது மட்டுமேயொழிய உயிருக்கானதில்லையே! எனில், உங்கள் உயிருக்கான ஊதியமாக நீங்கள் செய்வது என்ன?

இக்கேள்விக்கான விடையை நம் தமிழ்த்திருவள்ளுவனார் வழங்கிய குறள் சொல்கின்றது.

**ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது**
**ஊதியம் இல்லை உயிர்க்கு**

நீங்கள் சம்பாதிக்கின்ற பொருளில் அடுத்தவர்களுக்காக காருண்யத்தோடு என்ன செய்திருக்கிறீர்களோ அதுவே உங்கள் உயிருக்கான ஊதியம் என்கிறார் திருவள்ளுவர். இதே கருத்தினைத்தான் மூடி மறைக்காமல் இன்னும் வெளிப்படையாக வள்ளல் பெருமானார், **“உலகத்தில் மனிதப் பிறப்பைப் பெற்றுக் கொண்டவர்கள் இந்தப் பிறப்பினால் அடையத்தக்க ஆன்ம லாபத்தை காலமுள்ள போதே அறிந்து அடைய வேண்டும்”** என்று அருளுகின்றார்.

ஈதல் என்னும் காருண்யத்தை ஆன்மாவிற்கு ஊதியம் என்றார் வள்ளுவர். ஆனால், நம் வள்ளல் பெருமானாரோ இன்னும் ஒருபடி சென்று **காருண்யம் எனும் தயவினால் கிடைக்கப்போகும் அருள் என்பது ஆன்மாவிற்கு ஊதியம் மட்டுமல்ல அது லாபம்** என்கிறார். ஊதியம் என்பது செய்கின்ற வேலைக்குக் கிடைக்கின்ற சராசரி பிரதிபலன். ஆனால், லாபம் என்பது நாம் செய்த சிறிய முதலீட்டைக் காட்டிலும் அதிகமாகக் கிடைத்த வருமானம்.

*இங்கு வள்ளல் பெருமான் நமக்குச் சொல்லப்புகும் செய்தி ஒன்றுதான். ஜீவகாருண்யம் என்ற முதலீட்டை நாம் செய்தால் அதன் அளவைக் காட்டிலும் அதிகமான அருள் எனும் லாபம் நமக்குக் கிடைக்கும் என்கிறார்.*

*எப்படியான லாபம் அது? எம்மாதிரியானப் பொருளாக அது கிடைக்கும் என்கிற சராசரி மனிதரின் மனக்கேள்வி நமக்கும் நிச்சயம் எழும். அதற்கான விடையை நம் வள்ளல் அருட்பெருஞ்ஜோதி அகவலில் தருகின்றார்.*

**இகநிலைப் பொருளாய்ப் பரநிலைப் பொருளாய்**
**அகமறப் பொருந்திய அருட்பெருஞ்ஜோதி**

*இகம் என்பது இகலோகம் என்னும் இந்த உலகத்தையும், பரம் என்பது பரலோகம் என்னும் மேலுலகத்தையும் குறிப்பது. இகலோகத்து இன்பத்தை இம்மை இன்பம் என்போம். பரலோகத்து இன்பத்தை மறுமை இன்பம் என்போம். மனித தேகத்தைப் பெற்ற ஆன்மா இந்த உலகத்தில் வாழ்கின்ற வாழ்வை வளமோடும் நலமோடும் வாழ "இகநிலைப் பொருள்" என்னும் இவ்வுலகப் பொருட்களைப் பெற வேண்டும். இகலோக வாழ்வு வாழும்போதே பரஇன்பத்தையும் அனுபவிக்க வேண்டுமானால் "பரநிலைப் பொருள்" என்னும் மேலுலகச் செல்வத்தைப் பெறவேண்டும். அந்தந்த இடங்களுக்குரியப் பொருட்களை ஆன்மா பெறத்தவறிவிட்டால் இருமை இன்ப வாழ்வையும் பெற்று உய்ய முடியாது. எனவேதான் வள்ளுவர்,*

**அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு**
**இவ்வுலகம் இல்லாங்கி யாங்கு** *என்றார்.*

*இகப்பொருள் இல்லையென்றால் இவ்வுலகில் வாழ்வது கடினம் என்பதால்தான் குறுந்தொகை,* **"இல்லோன் இன்பம் காமுற்றாங்கு"** *என்றும், நாலடியார்,* **"ஒத்த குடிப்பிறந்தார்க் கண்ணும் ஒன்றில்லாதார் செத்த பிணத்திற்கடை"** *என்றும், அப்பர் சுவாமிகள்* **"மாடு தானத்தில்லெனின் மானுடர் பாடுதான் சொல்வாரில்லை"** *என்றும், நல்வழி பாடிய ஔவையார்,* **"இல்லானை இல்லாளும் வேண்டாள், மற்று ஈன்றெடுத்த தாய் வேண்டாள், செல்லாது அவர் வாய்ச்சொல்"** *என்றும் சீவகசிந்தாமணிப்பாடல்,* **"எட்டானும் பத்தானும் இல்லாதவர்க்கு இவ்வுலகில் இன்பமேபோல் ஒட்டவே கண்டீர்"** *என்றும் பாடி வைத்திருக்கின்றனர். இதையெல்லாம் கொண்டு இம்மைப் பொருளென்றால் பணம், பதவி, பகட்டு, கார், பங்களா என்று நினைத்துவிட வேண்டாம்.*

*இந்த இம்மை இன்ப வாழ்வைக் குறித்து நம் வள்ளல் பெருமானார் வசனபாகத்தில் பின்வருமாறு இயம்பியுள்ளார்.*

**"மனிதப் பிறப்பில் தேகத்திலும், கரணங்களிலும், புவனத்திலும், போகங்களிலும் குறைவின்றி நல்ல அறிவுடையவர்களாய் பசி, பிணி, கொலை முதலிய தடைகளில்லாமல் உறவினர், சினேகர், அயலார் முதலியருந் தழுவ சந்ததி விளங்கத்தக்க சற்குணமுள்ள மனைவியோடு விடயங்களை சிலநாள் அனுபவிக்கின்றதை இம்மை இன்ப லாபம் என்று அறிய வேண்டும்".**

*பணம், பொருட்களால் உண்டாகும் இம்மை இன்பத்திற்கும், வள்ளல் பெருமான் சொல்லும் இம்மை இன்பத்திற்கும் வித்தியாசம் இருக்கின்றது. அதை மிகத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். அதேபோல் பரலோக இன்பமாகிய மறுமை இன்பம் என்பதைக் குறித்தும் வள்ளல் பெருமான் குறிக்குமிடத்து,*

**"உயர் பிறப்பில் பெரிய தேக கரணங்களைப் பெற்றுப் பெரிய முயற்சியால் பெரிய விஷயங்களைப் பலநாள் அனுபவிக்கின்ற இன்பத்தை மறுமை இன்ப வாழ்வு என்று அறிய வேண்டும். மறுமை இன்ப லாபமென்பது, இம்மை இன்பத்தில் குறிக்கப்பட்ட நற்குணங்கள் எல்லாம் பொருந்த உயர் நிலையில் சுத்த விடயங்களைப் பலநாள் அனுபவிக்கின்ற இன்பலாபத்தை மறுமை இன்ப லாபம் என்று அறிய வேண்டும்"** *என்கின்றார்.*

*இம்மைக்கும், மறுமைக்கும் வள்ளல் சொல்கின்ற நூலிழை வேறுபாடு ஒன்றுதான். அன்பு, தயை, ஒழுக்கம், அடக்கம், பொறுமை, வாய்மை, தூய்மை முதலிய சுபகுணங்களைப் பெற்று விடய இன்பங்களை வருந்தி முயன்று அனுபவித்துப் புகழ்பட வாழ்தல் இம்மை இன்பம். அன்பு, தயை முதலிய சுபகுணங்களை பெற்று சுத்த விடய இன்பங்களை எண்ணியபடி தடைபடாமல் முயன்று பலநாள் அனுபவித்துப் புகழ்பட வாழ்தல் மறுமை இன்பம்.*

*இந்த இரண்டும் எங்கு வேறுபடுகின்றது என்பதை நன்கு கவனித்தீர்களா? மீண்டும் மீண்டும் படித்துப் பாருங்கள் எளிதில் பிடித்துக் கொள்ளலாம். ஆம், இன்பங்களை வருந்தி முயன்று அனுபவித்துப் புகழ்பட வாழ்தல் இம்மைக்கும், இன்பங்களை எண்ணியபடி முயன்று அனுபவித்தல் மறுமைக்கும், அனுபவித்துப் புகழ்பட வாழ்தல் இம்மைக்கும், அனுபவித்து பலநாள் புகழ்பட வாழ்தல் மறுமைக்குமான சிறிய வேறுபாடுகள். இது குறித்தத் தெளிவு மிக அவசியமானதாகும்.*

*சரி, இப்போது அகவலுக்கு வருவோம். அருட்பெருஞ்ஜோதி இறைவன் இகநிலைப் பொருளாகவும், பரநிலைப் பொருளாகவும் அகமறப் (குற்றமற) பொருந்தி இருக்கின்றார் என்று நம் பெருமான் குறிப்பிடுகின்றார். எனில், அருட்பெருஞ்ஜோதியாகியப் பொருளைக் கொண்டே இந்த இரண்டு வாழ்விற்குரிய குணங்களையும் பெற்று இவ்விரண்டு இன்பத்தையும் அடைய முடியும். அப்பொருளை சம்பாதிக்க வேண்டுமானால் ஜீவகாருண்ய ஒழுக்கமே வழியாம். இகலோக வாழ்விற்கும், பரலோக வாழ்விற்கும் அருட்பெருஞ்ஜோதியின் அருளைப் பெறுவதன் அவசியம் என்ன என்பதை*

**இடம்பெறும் இந்திரியஇன்பம் கரணஇன்பம் உலக**
**இன்பம் உயிர்இன்பம் முதல் எய்தும் இன்பமாகி**

*என்ற பதிவிளக்கம் என்ற தலைப்பின் கீழ் வரும் திருவருட்பா பாசுர வரிகள் தெளிவுபடுத்துகின்றது. அதாவது, ஐம்புலன்களால் அனுபவிக்கப்படும் இன்பமும், மனம் முதலான அந்தக் கரணத்தினால் அனுபவிக்கப்படும் இன்பமும் இவற்றால் உயிர் அடையும் இன்பமுமாகிய இவையனைத்தும் பூரண இன்ப வடிவான அருட்பெருஞ்ஜோதியின் ஏகதேச இன்பமேயாம்.*

*எல்லாம் போகட்டும். அடைய வேண்டிய ஆன்ம லாபம் என்பது இதுமட்டும்தானா? இம்மை, மறுமையில் சொல்லப்பட்டவை எல்லாம் ஏகதேச இன்பங்களாக இருக்கின்றதே. இதற்காகவா நம்மை அவசரப்படுத்துகின்றார்? இல்லை. இந்த அகவல் பாசுரத்திற்கு அடுத்ததாக ஒன்றை நம் வள்ளல் உரைக்கின்றார்.*

**ஈனமின்றி இகபரத்து இரண்டின் மேல் பொருளாய்**
**ஆனலின்று ஓங்கிய அருட்பெருஞ்ஜோதி**

*முதற்பாடலில் இறைவனே இம்மை, மறுமை இன்பமாக விளங்குகின்றார் என்ற வள்ளல் இப்பாடலில் அவர் இவ்விரண்டையும் கடந்ததான மேற்பொருளாகவும் விளங்குவதாகத் தெரிவிக்கிறார். இந்த மேற்பொருளே உண்மையான ஆன்ம லாபம் என்பதை நாம் உணர்தல் வேண்டும். இம்மை, மறுமை இன்பத்திற்கு மேலாக என்ன இருக்கிறது எனில் அங்கே பரம்பொருளாய்க் கலக்கின்ற பேரின்பம் இருக்கின்றதை வெளிச்சமிட்டுக் காட்டுகிறார் நம் பெருமானார்.*

*“எல்லாத் தேகங்களையும், எல்லாக் கரணங்களையும், எல்லாப் புவனங்களையும், எல்லாப் போகங்களையும் தமது பூரண இயற்கை விளக்கமாகிய அருட்சத்தியின் சந்நிதி விசேடத்தால்*

தோன்றி விளங்கச் செய்கின்ற பூரண இயற்கை உண்மை வடிவினராகிய கடவுளின் பூரண இன்பத்தைப் பெற்று எக்காலத்தும், எவ்விடத்தும், எவ்விதத்தும், எவ்வளவும் தடைபடாமல் அனுபவிக்கின்ற ஒப்பற்ற அந்தப் பெரிய இன்பத்தைப் பேரின்பம் என்று அறிய வேண்டும்" என்கிறார்.

இந்த இன்பம் கிடைக்கப்பெற்றால், அசுத்த தேகமாகிய இவ்வுடம்பு சுத்த தேகத்தையும், பிரணவ தேகத்தையும், அழியா ஞான தேகத்தையும் பெற்று மண்ணாலும், நெருப்பாலும், நீராலும், காற்றாலும் அழிவுபடாமல் அண்ட பிண்ட சூட்சுமங்களை எல்லாம் இருந்த இடத்திலிருந்தே கண்டுணர்ந்து, இருந்த இடத்திலிருந்தே அண்ட பிண்டத்தில் எங்கிருந்து பேசினும் கேட்டுணர்ந்து, ஆகாரம், நித்திரை, மைதுனம், பயம் என்கிற எத்தடையும் இல்லாது மரணமிலாத் தன்மையைப் பெறும். இதையும் மேற்கண்ட பதிவிளக்க திருவருட்பா பாசுர வரிகள் மிகத் தெளிவாக விளக்குகின்றது.

**தடம்பெறும் ஓர்ஆன்ம இன்பம் தனித்த அறிவின்பம்**
**சத்தியப் பேரின்பம் முத்தி இன்பமுமாய் அதன்மேல்**
**நடம்பெறுமெய்ப் பொருள்இன்பம் நிரதிசய இன்பம்**
**ஞானசித்தி பெரும்போக நாட்டரசு இன்பமுமாய்**
**திடம்பெற ஓங்கிய இயற்கைத் தனிஇன்ப மயமாம்**
**திருச்சிற்றம்பலம் தனிலே தெய்வம் ஒன்றே கண்டீர்**

ஆக, இம்மை இன்ப வாழ்வை வாழ்ந்து அதன் லாபத்தைப் பெற வேண்டுமானாலும், மறுமை இன்ப வாழ்வை வாழ்ந்து அதன் லாபத்தைப் பெற வேண்டுமானாலும் இவையனைத்தையும் கடந்த பேரின்ப வாழ்வை வாழ்ந்து அதன் லாபமான மரணமிலாப் பெருநிலையை அடைய வேண்டுமானாலும் தனித்தலைமைப் பெரும்பதியாகிய அருட்பெருஞ்ஜோதி இறைவனின் அருள் நிச்சயம் வேண்டும் என்பது இதனின்று தெளிவாகின்றது. இதனை மிகத் தெளிவாக நம் பெருமானார் சுத்த சன்மார்க்க வேதமாகிய ஜீவகாருண்ய ஒழுக்கத்தில்,


"இம்மூவகை இன்ப வாழ்வையும் கடவுளின் இயற்கை விளக்கமாகிய அருளின் ஏகதேசத்தைக் கொண்டும், அருட் பூரணத்தைக் கொண்டும் அடையக் கூடும் என்று அறிய வேண்டும்" என்றும் இவற்றில் "இம்மையின்ப லாபம், மறுமையின்ப லாபம் என்கிற இரண்டையும் அருளின் ஏகதேசத்தைக் கொண்டு அடையக்கூடுமென்றும், பேரின்ப லாபம் என்கின்ற ஒன்றை அருட்பூரணத்தைக் கொண்டு அடையக் கூடுமென்றும் அறிய வேண்டும்" என்றும் அருளியுள்ளார்.

இப்படி இருவகை வாழ்வையும் வாழ்ந்து இவற்றைக் கடந்த ஒரு பெருவாழ்வாகிய பேரின்ப வாழ்வை வாழ நாம் மரணித்து, வேறு தேவ உடல் எடுத்து தவம் புரிந்து பெறவேண்டியதும் இல்லையாம். "இகத்தே பரத்தைப் பெற்று மகிழ்ந்திடுதற்கு என்றே" நம் வள்ளல் பெருமானாரை அனுப்பி வைத்திருக்கின்றார் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர். அப்படி வந்த வள்ளல் அப்பேற்றைப் பெற "ஜீவகாருண்யம்" என்ற எளிய வழியை நமக்குச் சமைத்துக் கொடுத்திருக்கிறார். ஆகவே, நாம் காலமுள்ளபோதே அதனைச் சரியாகச் செய்து பேரின்பம் எனும் ஆன்ம லாபத்தைப் பெற்று வாழ்வோம்.

**ஊக்கமும் உணர்ச்சியும் ஒளிதரும் ஆக்கையும்**
**ஆக்கமும் அருளிய அருட்பெருஞ்ஜோதி**

என்பார் நம் வள்ளல். தொடர்ந்து அவனைத் தியானித்து தயவுக் குணத்தைப் பெருக்குங்கள். இம்மை இன்பத்தைப் பெறுதலுக்கான ஊக்கத்தையும், மறுமை இன்பத்தை அடைதலுக்கான உணர்ச்சியையும், பேரின்பமான ஒளி தேகத்தையும் பெறுதலுக்கான ஆக்கங்களையும் அருட்பெருஞ்ஜோதியே நமக்கு அருளும்.

திருச்சிற்றம்பலம்



இங்குள்ள நீங்கள் எல்லவரும் இதுவரைக்கும் இருந்ததுபோல் இனியும் வீண்காலம் கழித்துக் கொண்டிராதீர்கள். நீங்கள் எல்லவரும் நல்ல விசாரணையில் இருந்து கொண்டிருங்கள். அந்த விசாரணை எதுவென்றால், நம் நம்முடைய நிலை எப்படிப்பட்டது? நமக்குமேல் நம்மை அதிஷ்டிக்கின்ற தெய்வத்தினுடைய நிலை எப்படிப்பட்டது? என்று விசாரிக்க வேண்டியது. இவ்விசாரணை முகத்திலிருந்தால் நமது ஆன்ம அறிவை விளக்கமின்றி மூடிக் கொண்டிருக்கின்ற அனந்த திரைகளில் அழுத்தமாய் இருக்கின்ற முதல் திரையாகிய பச்சைத் திரை முதலில் நீங்கிப்போய்விடும். இப்படிப்பட்ட திரை நீங்க வேண்டுமென ஸ்தோத்தரித்தும், தெய்வத்தை நினைத்தும், நமது குறையை ஊன்றியும் இவ்வண்ணமாக இருக்கின்றபோதும், படுக்கின்றபோதும் இடைவிடாது ஆண்டவர் நமக்கு உண்மை தெரிவிக்க வேண்டும் என்கின்ற முயற்சியுடன் இருந்தால் தெரிய வேண்டியதைத் தெரிந்து கொள்ளலாம். – **மகா உபதேசம்; வசனபாகம்.**

# திருவருள் முறையீடு

தயவுத்திரு லோக ஆனந்தபாரதி, பெங்களூர்.



வென்றே முதலையும் மூர்க்கரும் கொண்டது மீளவிடார்
என்றே உரைப்பர் இங்கு என்போன்ற மூடர் மற்றில்லை நின்பேர்
நன்றே உரைத்து நின்று அன்றே விடுத்தனன் நாணில் என்மட்டு
இன்றே அக்கட்டுரை இன்றே என்சொல்வது இறையவனே. –12

(மூர்க்கன் – பிடிவாத குணமுடையவன், கட்டுரை – பொருள் பொதிந்த வார்த்தை)

**பாடல் அறிமுகம்:**

*அருட்பெருஞ்ஜோதி ஆண்டவன் திருப்பெயரை நினையாத தன் சிறுமையை உணர்ந்து அதை இறைவனிடம் பெருமான் குறையிரந்து கொள்வதாக இப்பாடல் அமைந்துள்ளது.*

**உரை:**

*எவ்வுயிர்க்கும் தலைமைப் பதியாகிய அருட்பெருஞ்ஜோதி இறைவனே! முதலையும், மூர்க்கனும் தான் பிடித்த பிடியில் தளராது வெற்றி அடையும் வரை விடமாட்டார்கள் என்று உலகத்தில் உரைப்பார்கள். ஆனால், முதலையிடமும், மூர்க்கனிடமும் உள்ள அப்பிடி தளராத குணம் மூடனாகிய என்னிடம் இல்லை! எவ்வாறெனில் உனது திருநாமத்தை நன்றாக உரைத்தும் அதை திருவருட் சாதனம் என்று கைக்கொள்ளாது அன்றே மறந்துவிட்டேன். என்போன்ற மூடர் யாரும் இல்லை. நான் என்ன சொல்வேன். நீயே காத்தருள் என்றவாறு.*

**விளக்கம்:**

*"முதலையும், மூர்க்கனும் கொண்டது விடார்" என்பது உலகியல் முதுமொழி. முதலை தான் பிடித்த இரையை உண்டு முடிக்கும் வரையும், மூர்க்கன் தான் சொன்னதில் அல்லது தன் நிலையில் அது தவறாகவே இருப்பினும் வெற்றி பெறும் வரையும் பிடி தளராது நிற்பர். இவ்வுதாரணத்தை வள்ளல் பெருமான் இவ்வருட்பாவில் எடுத்து அருளுகின்றார்.*

*உலகியலில் கூறப்படும் இம்முதுமொழியை பெருமான் அருளியலில் ஆள்வது அவரின் அருள் நோக்கத்தை இங்கு காட்டுகின்றது. மெய்ஞான விருப்பம் உடையவர்கள் (சாதகர்கள்) இறைவனிடம் பக்தி, அன்பு, பாச வைராக்கியம், ஜீவகாருண்யம், ஒழுக்கம் முதலியவைகளை உடையவர்களாக இருக்க வேண்டும். இச்சாதனைகளில் மிக முக்கியமான ஒன்று இறைவனின் திருநாமத்தை இடையறாது ஓதுதல்.*

எண்ணிலா சன்மார்க்க ஞானிகள் அளித்த திருகுறிப்புத் திருவார்த்தைகள் இறைவனின் திருப்பெயராக அமைந்து அந்நாமத்தை ஓதுவோரின் வினைகளை களைந்து அவ்வான்மாக்களுக்கு முத்தி இன்பத்தை நல்குகின்றது. இதையே வள்ளல் பெருமான் பேருபதேசக் குறிப்பில்

**"அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி**
**தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி"**

என்று இறைவனின் திருநாமம் பொருந்திய மந்திரத்தை வெளிப்படுத்தி அதை சாதனமாகவும் கூறியுள்ளார்.

இத்தகைய சிறப்புப் பொருந்திய இறைவனின் திருநாமத்தை நிதமும் பற்றாத தன் நிலையை முதலையோடும், மூர்க்கனோடும் ஒப்பிட்டு அவர்களே சிறந்தவர்கள் என்றும், ஏனெனில் தான் கொண்டதை வெற்றி பெறும் வரை விடமாட்டார்கள். ஆனால், நானோ இறைவனின் திருப்பெயரை மறந்துவிட்டேன் எனவே என்போன்ற மூடர் யாரும் இல்லையென்று கூற, "வென்றே முதலையும், மூர்க்கரும் கொண்டது மீளவிடார் என்றே உரைப்பர், என் மட்டு இன்றே அக்கட்டுரை, என் போன்ற மூடர் மற்றில்லை" என்று பாடுகின்றார்.

இறைவனின் திருப்பெயரைக் கேட்ட அடியவனாகிய யான், நாமத்தை உரைத்து பின் பல்வேறு உலகியல் அவத்தைகளால் இறைவனிடம் அன்பு செய்து அவன் நாமத்தை ஓதாது மறந்தேன் என்பதை, "நின் பேர் நன்றே உரைத்து நின்று அன்றே விடுத்தனன்" என்று இயம்புகின்றார்.

இறைவனின் திருப்பெயரை மூர்க்கனும், முதலையும் கைக்கொண்டிருந்தால் முத்தி, சித்தி அடையும் வரை விட்டிருக்க மாட்டார்கள். ஆனால், அவர்களினும் மூடனாகிய நான் அப்பழமொழி பொய்யாகும்படி இறைவனின் திருப்பெயரை பற்றாது விட்டுவிட்டேன் என்பதை, "என்மட்டு இன்றே அக்கட்டுரை" என வருந்திப் பாடுகின்றார்.

நிறைவாய் இக்குறை அனைத்தையும் பொருந்து தனக்கு அருள வேண்டியது இறைவன் ஆதலால், மூடனாகிய அடியேன் சொல்வதற்கு ஒன்றுமில்லை. எல்லாம் நீயே அறிவாய். எனவே, எனக்கு அருள் செய்வாய் என்று விண்ணப்பிக்கும் பொருட்டு, "என் சொல்வது இறையவனே" என்று வேண்டி நிற்கின்றார்.

இங்கு ஒரு முக்கிய கருத்து சிந்திக்கத்தக்கது. இத்திருப்பாசுரத்தில் பெருமான் இறைவனின் திருநாமத்தை மறந்து வருந்துவதாக அருளிச் செய்தது அவர் பொருட்டு அன்று.

நம் பொருட்டாம். வள்ளல் பெருமான் திருவுளத்தில் அருட்ஜோதி ஆண்டவர் இமைப்பொழுதும் நீங்காதவர். பெருமானும் ஆண்டவனை அணுவளவும் மறவாதவர். இக்கருத்து பல அருட்பா பாசுரங்களிலும், பெருமானின் மற்ற அருளிச் செயல்களிலும் உள்ளங்கை நெல்லிக்கனி எனத் தெரிந்ததே. உதாரணமாக அருட்பா இரண்டாம் திருமுறை நமச்சிவாய சங்கீர்த்தன லகரி விளக்கத்தில் பத்து பாடல்களில் இறைவனை தான் மறந்தது இல்லை என்று விரிவாகப் பாடுகின்றார்.

**இன்னும் பற்பல நாள் இருந்தாலும்**
**இக்கணந்தனிலே இறந்தாலும்**
**துன்னும் வான்கதிக்கே புகுந்தாலும்**
**சோர்ந்து மாநரகத்து உழன்றாலும்**
**என்ன மேலும் இங்கெனக்கு வந்தாலும்**
**என்பிரான் எனக்கு யாது செய்தாலும்**
**நன்னர் நெஞ்சகம் நாடி நின்றோங்கும்**
**நமச்சிவாயத்தை நான் மறவேனே**

இவ்விதம் நம் வள்ளல் பெருமானார் இறைவனை மறவாது தொழுது அருள்நிலை அடைந்ததுபோல், நாமும்

**அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி**
**தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி**

என்னும் இறைவனின் உண்மையை ஐயம், திரிபு, மயக்கம் இன்றி வெளிப்படக் காட்டும் மகாமந்திரத் திருவாக்கியத்தை எப்போதும் மறவாது ஓதி சுத்த சன்மார்க்க அனுபவம் பெற்று உய்வடைவோம்.


திருச்சிற்றம்பலம்

## சன்மார்க்கப் பெரும்பதி வருகை

இப்போது வருகிற நமது கடவுள் இதற்குமுன் சமய சாத்திர புராணங்களில் வந்ததாகச் சொல்லுகின்ற பலவகைப்பட்ட ஏற்பாட்டுக் கர்த்தர்கள், மூர்த்திகள், கடவுளர், தேவர், அடியார், யோகி, ஞானி முதலானவர்களில் ஒருவரல்ல. இப்படி சொல்லப்பட்ட எல்லா மூர்திகளும், எல்லாக் கடவுளரும், எல்லாத் தேவர்களும், எல்லா யோகிகளும், எல்லா ஞானிகளும் தங்கள் தங்கள் அனுபவங்களைக் குறித்து எதிர்பார்க்கின்றபடி எழுந்தருளுகின்ற தனித்தலைமைப் பெரும்பதி. இது உண்மையாயின் அந்தப் பதியின் அருளை நான் பெறுவேன், பெறுகின்றேன், பெற்றேன். என்னை அடுத்த தாங்களும் பெறுதற்கு யாதொரு தடையும் இல்லை. பெறுவீர்கள், பெறுகின்றீர்கள், பெற்றீர்கள். அஞ்சவேண்டாம். - வசனபாகம்

# உலக வாழ்வெனும் பட்டறை

**சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடுந் துன்பஞ்**
**சுடச்சுட நோற்கிற் பவர்க்கு – தவம்; குறள் 267**



சாரதி பல ஆண்டுகள் அயராமல் உழைத்தப் பிறகு தான் கிட்டத்தட்ட ஒரு பொதுச் சொத்தாக மாறிவிட்டிருந்ததை உணர்ந்தார். எல்லோருக்கும் அவருடைய நேரம் தேவைப்பட்டது. "புத்திசாலித்தனம் என்பது ஒரு சலுகை அல்ல. அதுவொரு பரிசு. அது மனித குலத்தின் மேம்பாட்டிற்காகப் பயன்படுத்தப்பட வேண்டும்" என்ற உயர்ந்த குறிக்கோளோடு வாழ்கின்றவர் என்பதால் மற்றவர்களின் நலனுக்காக தன் நேரத்தைப் பகிர்ந்து கொள்வதற்கு அவரும் மிக ஆர்வமாக இருந்தார். இருப்பினும் தான் தனித்து இருக்க வேண்டும் என்ற ஒரு விவரிக்க முடியாத ஆர்வம் அவருக்குள் எழுந்தது. ஒரு நீண்டகால விடுப்பு எடுப்பதென்று அவர் தீர்மானித்தார். எல்லாவற்றிலிருந்தும் எல்லோரிடமிருந்தும் விலகி ஒரு வருடத்திற்கு ஒரு கூட்டுக்குள் செல்வதற்கு அவர் முடிவு செய்தார். மேற்கு தொடர்ச்சி மலைகளில் இருந்த ஒரு கிராமத்தை அவர் கண்டுபிடித்து அங்கு குடிபெயர்ந்தார்.

கண்களுக்கு எட்டிய தூரம் வரை, தூரத்திலிருந்த மலைகள்வரை பசுமையாகக் காட்சியளித்தது அந்த இடம். அங்கு மெல்லென வீசிய புத்துணர்ச்சியூட்டும் காற்று குணமளிப்பதாகவும் நலமளிப்பதாகவும் இருந்தது. நவீன நாகரீகத்தின் தீண்டலுக்கும் தாக்குதலுக்கும் ஆளாகியிராத ஒரு சிறிய கிராமம் அது. கொலம்பஸ் போன்றவர்களின் கண்களில் படாத ஓர் அமைதியான சொர்க்க பூமி அது. அதிக இயற்கையும் குறைவான மனிதர்களும் இருந்த இந்த இடத்திற்குள் ஒரு பெட்டி நிறைய புத்தகங்களுடனும், ஒரு பை நிறைய ஆடைகளுடனும் அங்கு வந்து சேர்ந்தார் சாரதி.

பதினோரு மாதங்கள் இவ்வாறு ஓய்வெடுத்த பிறகு, ஊருக்குத் திரும்பிச் சென்று, மற்றவர்களின் நலனுக்காகத் தன் புத்திசாலித்தனத்தை முதலீடு செய்வதென்ற தனது குறிக்கோளைத் தொடர்வதற்கு சாரதி தயாரானார்.

ஆனால், அவரது மகன் அவருக்கு மிக முக்கியம் என்பதால் இந்த அற்புதமான இடத்தின் அமைதியை அவனும் அனுபவிக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். அதன் பிறகு அவர்கள் இருவரும் ஒன்றாக வீடு திரும்பலாம் என்று அவர் நினைத்தார். எனவே, இந்த கிராமத்திற்கு வந்து தன்னுடன் ஒரு வாரம் செலவிடுமாறு அவர் தன் மகனுக்கு கடிதம் எழுதினார்.

ஒருநாள் சாரதி நினைத்தபடி அவரின் சொர்க்க பூமிக்கு அவரது மகன் வந்து சேர்ந்தான். சாரதியின் மகன் அவரைப்பார்த்து மகிழ்ந்து, "ஏன் எங்கள் மனம் உங்களைத் தேடித் தவிக்கிறது என்று உங்களுக்கே தெரியும். எல்லாம் சுலபம் என்பதுபோல் நீங்கள் தோன்றச் செய்கிறீர்கள். உங்கள் முன்னிலையில் வாழ்க்கை எளிதானதாக, முயற்சி தேவைப்படாததாக உள்ளது. நீங்கள் இல்லாமல் வாழ்க்கை உண்மையிலேயே ஒரு பிரச்சனையாகத் தோன்றுகிறது. நீங்கள் என்னுடன் இல்லாமல் இருந்த நேரத்தில் வாழ்க்கை என்னை எப்படி நடத்தியுள்ளது என்பதை உங்களிடம் கூறத் துவங்கக்கூட என்னால் முடியவில்லை" என்று கூறினான். இப்படி பேசிக் கொண்டிருக்கும்போதே சாரதியின் சிறிய புகலிடத்திற்கு அவர்கள் இருவரும் வந்து சேர்ந்தனர்.

மாலையின் பின்னணியில் கம்பீரமான வெண்ணிலாவும் அதன் மின்னும் நண்பர்களும் சூழ்ந்திருக்க, நெருப்பின் முன்னால் அமர்ந்திருந்தபோது தனது மகனின் பிரச்சனைகளைப் பற்றியும் வாழ்க்கை அவனைக் கொடுமையாக நடத்தியிருந்ததைப் பற்றியும் சாரதி தன் மகனிடம், "பூகம்பங்கள், சூறாவளிப் புயல்கள், வெள்ளங்கள், கலவரங்கள், தீராத நோய்கள், முடமாக்கிய விபத்துக்கள் என்று எப்படிப்பட்ட பிரச்சனைகளை நீ எதிர்கொண்டாய்?" என்று கேலியாக அவர் கேட்டார்.

தன் தந்தை தன்னை உரசிப் பார்க்கிறார் என்பதைப் புரிந்து கொண்ட சாரதியின் மகன், அவரை முறைத்துப் பார்த்துவிட்டு மீண்டும் தன் பார்வையை அங்கிருந்த நெருப்பின் பக்கம் திருப்பினான். சாரதி தொடர்ந்தார். "நாம் ஒரு நீண்டகாலப் பிரிவிற்குப் பிறகு சந்திக்கிறோம். உனக்கு வருத்தம் ஏற்படுத்தும் விதத்தில் நான் எதுவும் கூற விரும்பவில்லை. ஆனால், என் மகன் உயர்ந்த பக்குவத்துடன் தன் வாழ்க்கையை வாழவேண்டும் என்று நான் எதிர்பார்க்கிறேன். உன் அனுமதியோடு என் எண்ணங்கள் சிலவற்றை நான் உன்னுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

*சில சமயங்களில் ஒருவரது அகங்காரம் எதையும் கேட்கத் தயாராக இல்லாதபோதும், ஆர்வம் வெற்றி பெற்றுவிடும். அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் ஒன்று இது" என்றார். இதைக் கேட்ட சாரதியின் மகன் லேசாகத் தலையாட்டினான். சாரதி தன் நாற்காலியைத் தன் மகனின் அருகே இழுத்துப் போட்டார்.*

*"வாழ்வின் பிரச்சனைகளைப் பற்றித் தான் உருவாக்கி வைத்துள்ள கற்பனைக் கதைகளில்தான் மனிதனின் அகங்காரம் தழைக்கின்றது. நம் அகங்காரம் நம்மை ஏமாற்றி எதை நம்ப வைத்தாலும் சரி, நம்முடைய பிரச்சனைகளில் பெரும்பாலானவை நம் விருப்பத்தேர்வுதான்.* **நாம் பிரச்சனைகள் என்று அழைக்கும் விஷயங்களில் பெரும்பாலானவை, அவை பெரியவையோ அல்லது சிறியவையோ எல்லாமே சுயமாக நம்மால் உருவாக்கப்படுபவைதான்.**

*உனது காருக்கு எண்ணெய் மாற்றும் நேரம் வந்துவிட்டதை உணர்த்தும் விதமாக டாஷ்போர்டின்மீது உள்ள சிவப்பு விளக்கு மின்னுவதை நீ காணும்போது, அந்த வேலையை உடனடியாகச் செய்யாமல் காலம் தாழ்த்தும்போது ஒரு பிரச்சனையை நீ தேர்ந்தெடுக்கிறாய். போக்குவரத்து நெரிசலில் உன் கார் நடுவழியில் நின்றுவிடும்போது நீ வருத்தம் கொள்ளக் கூடும். ஆனால், நீ இப்போது எதிர்கொண்டிருக்கும் பிரச்சனை நீ சுயமாக உருவாக்கிய பிரச்சனை என்ற உண்மையை அது மாற்றப் போவதில்லை.*

*உன் வருமானத்தை மீறி நீ செலவு செய்யும்போதும், கிரெடிட் கார்டுகளை அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்தும்போதும் ஓர் எதிர்காலப் பிரச்சனையை நீ உனக்காக உருவாக்கிக் கொண்டிருக்கிறாய் என்பதை உணர்ந்துகொள்.*

*நம் வாழ்வில் உள்ள மிக முக்கியமான உறவுகளைப் பராமரிப்பதை நாம் தொடர்ந்து காலம் தாழ்த்தும்போது, இறுதியில் வெறுப்பு அல்லது விலகல் போன்ற பிரச்சனைகள் எழும் என்பதை நாம் அறிவோம்.*

**சிறிய சவால்களும் அசௌகரியங்களும் ஒவ்வொரு நாளும் நம்மை வருத்தப்பட வைக்கின்ற பெரிய பிரச்சனைகளாக உருவாக நாம் அனுமதிக்கிறோம்"** *என்று கூறினார். தன் தந்தையின் கண்களைப் பார்ப்பதைத் தவிர்க்கும் விதமாக நெருப்பைப் பார்ப்பதுபோல் பாவனை செய்து கொண்டிருந்த சாரதியின் மகன் இப்போது*

நடிப்பதை நிறுத்திவிட்டு அவரை நேரடியாகப் பார்த்துக் கொண்டிருந்தான். சாரதி அவனிடம், “இயற்கையின் சீற்றங்கள், எதிர்பாராத தீராத நோய்கள் போன்றவை தனிமனிதனின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டவை.

ஆனால், பெரும்பாலான பிற பிரச்சனைகள் அவன் சுயமாக உருவாக்குபவைதான். இன்று நான் எதிர்கொள்ளும் காட்டுத் தீ, நேற்று நான் கவனிக்காமல் விட்டுவிட்ட ஒரு சிறு பொறிதான். பெரும்பாலான பிரச்சனைகள் கண்டுகொள்ளாமல் விடப்பட்ட நேற்றைய சவால்கள்தான்” என்று கூறினார்.

அவர் மேலும், “மகனே! நீ உன் வாழ்வை மாபெரும் உயரங்களுக்கு எடுத்துச் செல்ல விரும்பினால், மாபெரும் சவால்களை எதிர்கொள்வதற்கு நீ தயாராக இருக்க வேண்டும். அப்படி நீ பெரிய இலக்குகளை நிர்ணயிக்க விரும்பினால், மாபெரும் சவால்களை எதிர்கொள்ள நீ தயாராக இருந்தால், முதலில் இந்த அன்றாட அற்ப இடையூறுகளிலிருந்து நீ மீள வேண்டும். ஏனெனில், இந்த அற்ப விஷயங்கள் உன் ஆற்றலை உன்னிடமிருந்து அபகரித்துவிடுகின்றன. வாழ்க்கை முறையை ஒரே சீராகவும், சிறிது ஒழுங்குமுறையுடனும் அமைத்துக் கொள்வதன் மூலம் நமக்கு பழக்கமாகிவிட்ட இந்த அற்ப விஷயங்கள் பெரும்பாலானவற்றிலிருந்து நம்மால் மீள முடியும்” என்று கூறினார்.

சாரதியின் மகன் தன் நாற்காலியைவிட்டு எழுந்து வந்து தன் தந்தையின் காலடியில் வந்து அமர்ந்து, “அப்பா, நீங்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தாலே எனக்குப் போதும். சாப்பாடுகூட எனக்குத் தேவையில்லை. என் உலகமே எனக்கு மறந்துவிடுகிறது” என்றான். தன் மகனை அணைத்தபடி சாரதி தொடர்ந்து பேசினார்.

“முதலில், ‘பிரச்சனை’ என்ற வார்த்தையை சர்வசாதாரணமாகப் பயன்படுத்துவதை நிறுத்து. ஒரு பிரச்சனைக்கும் ஒரு சவாலுக்கும் இடையே பெரும் வித்தியாசம் உள்ளதைப் புரிந்து கொள்.

ஒரு காட்டின் நடுவில் சிங்கம் ஒன்று என் எதிரில் நிற்கையில் என் கையில் எந்த ஆயுதமும் இல்லையென்றால் அப்போது நான் பிரச்சனையில் இருக்கிறேன் என்று அர்த்தம். ஆனால், என் கையில் ஒரு AK-47 இயந்திரத் துப்பாக்கி இருந்தால், அந்த சிங்கத்திற்குப் பிரச்சனை என்று அர்த்தம். சரியான நேரத்தில் துப்பாக்கியால் சுடும் சவால் மட்டும்தான் எனக்கு இருக்கும்.

**நான் எதிர்கொள்ளும் ஒரு சூழ்நிலை என்னிடம் உள்ள வளங்களை விடப் பெரியதாக இருந்தால் அதைப் பிரச்சனை என்று கூறலாம். ஆனால், என்னிடமுள்ள வளங்கள் நான் எதிர்கொண்டுள்ள சூழ்நிலையைவிடப் பெரிதாக இருந்தால் அது வெறும் சவால்தான். என் வளங்களை முறையாகக் கையாண்டு நான் அந்தச் சூழ்நிலையில் இருந்து மீண்டு வர வேண்டும்.**

*பெரும்பாலான நேரத்தில் மனிதன் வாழ்க்கையை ஒரு பிரச்சனையாகவே பார்க்கிறான். ஏனெனில், அந்தச் சூழ்நிலையில் இருந்து வெளிவருவதற்கு அவன் வசம் உள்ள வளங்களை கணக்கில் கொள்ளத் தவறிவிடுகிறான். நம்முடைய பிரச்சனைகளை அளவுக்கதிகமாக மதிப்பிடுவதும், அப்பிரச்சனைகளை முறியடிக்கக் கூடிய நமது திறனை மிகவும் குறைவாக மதிப்பிடுவதும்தான் மனிதனுடைய இக்கட்டான சூழ்நிலை" என்று கூறிவிட்டு தண்ணீர் குடிக்கும் சாக்கில், தன் மகனைத் தனியாக அமர வைத்துவிட்டு சாரதி அங்கிருந்து நகர்ந்தார். தன் மகன் தான் செவிமடுத்துள்ள விஷயங்களைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று அவர் விரும்பினார். வார்த்தைகள் அறிவைக் கொடுத்தாலும், அமைதியான கணங்களிலும் சிந்திக்கும் நேரங்களிலும்தான் அவ்வார்த்தைகள் ஞானமாக மாறுகின்றன. ஒரு தனிநபரைப் பரிபூரணமாக மாற்றவில்லை என்றால், தகவல் என்பது மனத்தில் உள்ள குப்பையே அன்றி வேறெதுவும் இல்லை.*

*சாரதி திரும்பி வந்தபோது, தன் மகனுக்காக ஒரு பாட்டில் நிறைய தண்ணீர் கொண்டு வந்தார். "அப்பா, நான் உங்களை நேசிக்கிறேன்" என்ற இதமான வார்த்தைகளுடன் சாரதியின் மகன் ஓரிரு மடக்குகள் தண்ணீர் குடித்தான்.*

*எதிர்பாராத விதத்தில் செய்யப்படும் ஒரு சேவை எவ்வாறு வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் விசுவாசத்தை உருவாக்குமோ அதுபோல் பரிவை வெளிப்படுத்தும் ஒவ்வோர் எதிர்பாராத நடவடிக்கையும் தனிப்பட்ட உறவுகளில் அன்பை பலப்படுத்தும்.*


*சாரதி தொடர்ந்தார்.* **"வாழ்வின் சவால்கள் உன்னைத் தடுத்து நிறுத்துவதற்கானவை அல்ல. உண்மையில், அவை உனக்கு சேவை செய்கின்றன. நீ யார் என்பதை கண்டுகொள்ள அவை உனக்கு உதவுகின்றன.**

*சவால்கள் உண்மையிலேயே உனக்கு இணங்கி நடக்கின்றன. ஏனெனில், நீ அவற்றை வெற்றி கொள்ளும்போது அவை இன்னும் பெரிய சவால்களைப் நீ பின்தொடர உனக்கு உதவுகின்றன. அதன் வாயிலாக அவை உனக்கு மாபெரும் வளர்ச்சியை கொடுக்கின்றன.*

*நீ குழந்தையாக இருந்த நேரத்தில் தவழத் துவங்கியபோது உன் அம்மா உனக்கு முன்னால் சற்றுத் தள்ளி ஒரு பொம்மையை வைத்தார். நீ அதை எட்ட வேண்டும் என்ற சவாலை அவர் உனக்குக் கொடுத்தார். அதை உன் கை தொடவிருந்த ஒவ்வொரு முறையும் அவர் அதை உன்னிடமிருந்து இன்னும் சற்றுத் தள்ளி வைப்பார். உன் வளர்ச்சிக்கு ஊக்கியாக இருந்த அவரது செயல் கொடுமையானதா? அல்லது அன்பின் வெளிப்பாடா? நீ முதன்முதலில் உன் சிறிய பாதங்களை எடுத்து வைத்து நடந்தபோது உன் அம்மா எப்போதும் உன்னிடமிருந்து சற்றுத் தள்ளி நின்று கொண்டு தன்னை வந்து தொடும்படி உனக்கு சவால் விடுவார். சில சமயங்களில் நீ கீழே விழுந்து உன்னைக் காயப்படுத்திக் கொண்டதென்னவோ உண்மைதான். ஆனால், அது வளர்ச்சியின் ஓர் அங்கம் அல்லவா? அதேபோல்,* **இறை தனது மிகப் பிரியமான படைப்பாம் மனிதனுக்கு அவனிடமுள்ள ஆற்றல்களை அவன் கண்டுகொள்வதற்காக எப்போதும் சவால்விடுகிறது.**

*மேலும், மனிதர்கள் குழப்ப நிலையில் இல்லாமல் போயிருந்தால் ஒரு புத்தர் தோன்றியிருக்க மாட்டார். ராவணன் இல்லாமல் ராமனால் அனுமனை சந்தித்திருக்க முடியாது. துரியோதனன் இல்லையென்றால் பகவத் கீதை இருந்திருக்காது. 'அதர்மம் உச்ச நிலையில் இருக்கும்போது கடவுள் அவதரிப்பார்' என்று கீதைக் கூறுவதால், அதர்மம் கூட இறைவன் கீழிறங்கி வருவதற்கான ஒரு வாய்ப்புதான் என்பதை தயவு செய்து நீ புரிந்து கொள்" என்று கூறினார்.*

*பின்பு சாரதி தன் மகனிடம் இவ்வாறு கேட்டார். "அன்னை பூமி எந்தவொரு விதையினிடத்திலும் பரிவு காட்டுவதில்லை என்பது உனக்குத் தெரியுமா?* **எந்தவொரு விதையும் சுலபமாக முளைத்துவர அது அனுமதிப்பதில்லை.**



**உண்மையில் அது ஒவ்வொரு விதைக்கும் எதிராக நிற்கிறது. அந்த விதை இப்புவியின் ஆற்றல்கள் அனைத்தையும் எதிர்த்துப் போரிட்டு முளைவிட்டு நிலத்திற்கு மேலே வெளிவர வேண்டியுள்ளது. அதிர்ஷ்டவசமாக அந்த விதை முளைத்து வரும்வரை அதை எதிர்த்து நின்ற அதே பூமி பிறகு அதைப் பேணிப் பராமரித்து அவ்விதை வளர்வதற்கு உதவுகிறது. அந்த விதையைத் தகுதி உடையதாக்குவதற்கான இயற்கையின் வழி அது.**

*அந்த விதை தகுதியானது என்று இயற்கை உணர்ந்தால் அது தன் முழுமையான ஆற்றலுடன் வளர்வதற்குத் தேவையான அனைத்து வளங்களையும் பூமியானது அவ்விதைக்கு வழங்குகிறது. பூமியின் எதிர்ப்பிற்கு ஈடு கொடுக்க முடியாமல் தோற்றுப்போன விதைகள் மடிந்து மண்ணோடு மண்ணாகின்றன. அதேபோல், அனைத்து மாபெரும் மனிதர்களுமே மாபெரும் சவால்களை எதிர்கொள்வதற்குச் சூழ்நிலைகளின் கட்டாயத்திற்கு ஆளான சாதாரண மனிதர்கள்தாம். தங்கள் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட ஆற்றல்களை வெற்றி கொண்டு மிகச் சிறந்த வெற்றியாளர்களாக உருவெடுத்த எளிய மனிதர்களால் வரலாறு நிரம்பி வழிகிறது" என்று கூறி முடித்தார்.*

*மேசையில் சாரதி உணவைப் பரிமாறுவதற்காக சாரதி எழுந்து சென்றார்.* **கடவுள் ஏன் கச்சாப் பொருட்கள் அடங்கிய ஓர் உலகத்தைப் படைத்து, தீட்டப்படாத ஓவியத் துணிகள், பாடப்படாத இசை, தீர்க்கப்படாத சவால்கள் என்று முழுமையான பொருட்களை உருவாக்குவதற்கு அவற்றை மனிதனிடம் விட்டுச் சென்றார் என்பதை சாரதியின் மகன் உணர்ந்தான். அவற்றைப் பூர்த்தி செய்வதில் மனிதன் தன்னுடைய முழுமையான ஆற்றல்களைக் கண்டுகொள்கிறான் என்பதையும் தெரிந்து கொண்டான்.**

*புடமிட்டு சுடச்சுட ஒளிவிடுகின்ற பொன்னைப்போல் தவம் செய்கின்றவரை துன்பம் வருத்த வருத்த மெய்யுணர்வு மிகும்.*


*அறிந்த நாள்கள் தொடங்கி இற்றைப் பகலின் வரையுமே*
*அடியேன் பட்ட பாட்டை நினைக்கில் கல்லும் கரையுமே*
*எறிந்தப் பாடு முழுதும் பெரிய இன்பம் ஆயிற்றே*
*எந்தாய் கருணை எனக்கு மிகவும் சொந்தம் ஆயிற்றே*

*- திருஅருட்பா*

திருச்சிற்றம்பலம்

# கோயில் நகரம்

**தயவுதிரு அருட்பா அருணாச்சலம் அவர்கள் கட்டுரையிலிருந்து...**



*இவ்வுடலை ஒரு நகரத்திற்கு ஒப்பிட்டுப் பார்க்க முடிகிறது. திருமூலநாதர் இவ்வுடம்பினை பெரிய கோயில் என்கிறார். சாந்தோக்ய உபநிடதம் உடம்பை வெறும் நகரம் என்று சொல்லாமல் இறைவன் வாழும் நகரம் என்று கூறி பெருமைபடுத்துகிறது. அஃதாவது கோயில்நகரம்தான் இவ்வுடம்பு. கோயில் நகரம் என்றதும் நம்கண்முன் நிற்பவை கும்பகோணமும், காஞ்சிபுரமும்தான். எண்ணற்ற கோயில்கள், வழிபாட்டுமுறைகள், கடவுளர்கள் என இருந்தும் எஞ்சி நிற்பது ஏற்றமா? ஏமாற்றமா?*

**ஆரூரர் இங்கு இருக்க அவ்வூர்த் திருநாள் என்று**
**ஊர் ஊர்கள் தோறும் உழலுவீர் – நேரே**
**உளக்குறிப்பை நாடாத ஊமர்காள் நீவிர்**
**விளக்கு இருக்கத் தீத்தேடுவீர்.**

*என்றும் பட்டினத்து சுவாமிகள் கூறுகின்ற மறைவாசகமும் மேற்கூறுகின்ற உண்மையைத்தான் மறைக்காமல் உரைக்கின்றன. இதன் மூலம் நாம் பெற வேண்டிய மெய்யறிவு யாதெனில், ஊர்கள் தோறும் சுற்றித்திரிந்து கோயில்கள் தோறும் வழிபாடு செய்தாலும், அப்பரம் பொருளை நெருங்க முடியாது; அடைய முடியாது; அதனுள் ஒடுங்க முடியாது என்பதே தீர்க்கமான முடிவாகும்.*

**உடலாகிய நகரத்தின் செயல்பாடுகள்:**

*நகரத்தில் எத்தனை செயல்பாடுகள் நடைபெறுகின்றனவோ, அத்தனையும் இவ்வுடல் என்னும் நகரிலும் நிகழ்ந்து கொண்டு இருக்கின்றன. எழுபத்தீராயிரம் நாடி நரம்புகளால் தலைநகரம் இணைக்கப்பட்டுள்ளது. அவற்றுள் அகலவழிப் பாதைகள் பத்து, இடைகலை, பிங்கலை, சுழுமுனை, சிங்குவை, புருடன், காந்தாரி, அக்கினி, அலம்புவி, சங்குனி, குரு எனப்படுபவை.*

வாதம், பித்தம், சிலேத்துமம் என்னும் மூன்று நாடிகளும் சமமாக அதனதன் நிலையில் ஓடவேண்டும். மாறாக ஒன்றை ஒன்று மிஞ்சி ஓடினால் உடல் நலம் பாதிக்கப்படும். முற்கால வைத்தியர்கள், நாடியைப் பிடித்துப் பார்த்து எது விஞ்சி நிற்கிறதோ அதனை சமன் செய்யவே மருத்துவம் செய்வர். வாதம் பித்தம் சிலேத்துமம் ஆகிய நாடிகள் ஒன்றை ஒன்று முரணுமேல் நாம் நம் ஆயுள் குறித்து ஐயுற வேண்டும்.

வாதம், பித்தம், சிலேத்துமம் இம்மூன்றும் ஒன்றையொன்று விஞ்சாமல் சமனாக இருக்கவேண்டுமானால் அதிகாலை சூரிய உதயாதி நாழிகையில் எழுந்து விழிப்புடன் இருக்க அறிவுரை வழங்குகிறார் நமது வள்ளல் பெருமானார். பிரம்ம முகூர்த்தம் என்று சொல்லப்படும் அதிகாலை மூன்றே முக்கால் மணியிலிருந்து ஐந்து முப்பது மணிவரையில் மேலிருந்து அமுதக்காற்று எனப்படும் சுத்தமான பிராணவாயு வீசுவதால் அவ்வேளையில் தியானம் செய்தால் வாதம், பித்தம், சிலேத்தும நாடிகள் சமனாகிறது. அவற்றுள்ளும் அதிமுக்கியமான இடகலை, பிங்கலை, சுழுமுனை நாடிகள் மூன்று. இதுவன்றி உயிருடன் உடல் இயங்குவதற்கான பத்து வாயுக்கள். பிராணன் என்ற வாயு உடலின் மேல் நோக்கிய இயக்கத்தையும், அபானன் கீழ் நோக்கிய இயக்கத்தையும், வியானன் எல்லா பக்க இயக்கத்தையும், உதானன் இறுதிக் கட்ட உயிர் வெளியேற்றத்தையும், சமானன் உணவு செரித்தல், இரத்தமாக மாற்றுதலையும், நாகன் வாந்தி மற்றும் ஏப்பத்தையும், கூர்மன் கண் இமைகளின் இயக்கத்தையும், கிருகறன் பசியையும், தேவதத்தன் கொட்டாவி, தனஞ்செயன் கருவுறுதலோடு உடம்பின் ஆரோக்கியத்தையும் கண்காணித்து காவல் துறையாகவும் செயல்படுகின்றன. அதோடல்லாது நமது அனைத்து செயல்பாடுகளையும் படம்பிடித்து சித்தமாகிய அந்தக்கரணத்தில் பதிவு செய்யும் இரகசியப் படப்பிடிப்புக் கருவியும் இவ்வுடம்பில் பொருத்தப்பட்டுள்ளது. இப்பத்து வாயுக்களில் பிராணன் என்பது தலைமைக்காவல் கண்காணிப்பாளர். எங்கெங்கு காணினும் சத்தியடா என்பது பிராணனே.

**பஞ்சு பூதங்கள் – பஞ்ச புலன்கள்:**

மண்ணின் தோற்றம் நாற்றம், நீரின் தன்மை சுவை, தீயின் தேர்வு ஒளி, காற்றின் பகுதி ஊறு, விண்ணின் கூறு ஓசை, இவ்வைந்தும் ஐம்பூதங்கள் எனப்பெறும் ஐந்து மூலங்களின் அங்கங்களாகி, ஐம்புலன்கள் எனப்பெற்று ஐம்பொறிகளின் வழியாக இயங்கி வருகின்றன.

**நிலம் தீ நீர்வளி விசும்போடு ஐந்தும்**
**கலந்த மயக்கம் உலகம்**

என்கிறது தொல்காப்பியம். பொறிபுலன் வழிச் செல்வதில் வெறியராகி சிற்றின்பம் துய்த்து ஆன்மாக்கள் வீழ்ச்சி அடையாமல், அப்புலன்வழியே மெய்யின்பம் துய்த்து உய்வடைய வேண்டும். ஆகாயத்தின் அம்சமாகிய காது ஓசையையும், காற்றின் அம்சமாகிய மெய் பரிசமெனும் தொடு உணர்வையும், தீயின் அம்சமாகிய கண்கள் ஒளியையும், நீரின் அம்சமாகிய நாக்கு சுவையையும், நிலத்தின் அம்சமாகிய நாசி மணத்தையும் முகர்ந்து அறியும் செயலையும் செய்துவருகின்றன.

**உடம்பில் நவகோள்களின் இருப்பிடங்கள்:**

மேலும், இவற்றின் செயல்பாடுகளை பிருதிவி (நிலம்) குரு– நாசியிடமாக வாசனை அறிதலும், அப்பு (நீர்) சுக்கிரர் – நாவிடமாக சுவையறிதலும், தேயு (தீ) அங்காரர் – நேத்திரமிடம் வடிவமறிதலும், வாயு புதன் – சரீரத்தில் பரிசமறிதலும், ஆகாயம் சனி – செவியிடம் சப்தமறிதலும், இராகு, கேது சாயை என்றும், அவை குதம் குய்யம் இருப்பிடமாகக் கொண்டு மல ஜல விடுத்தறிதலும் செய்கின்றனவென்றும் இவ்வாறு நவக்கிரகங்கள் வேலை செய்து வருகின்றன என்பதை வேதங்கள் சொல்கின்றன. தூல தேகம் சக்தி சந்திரராம், உயிர்ப்பாகிய உயிர் சூரியர் சிவமாம்; இவ்வாறு வேதங்கள் சொல்ல, திருமூலர் திருமந்திரம் எவ்வாறு ஓதுகிறது? இவ்வுடலை நடமாடுங் கோயில் என்கிறது.

**ஊனுடப்பு ஆலயம்:**

**கோயில் கொண்ட அன்றே குடிகொண்ட ஐவரும்**
**வாயில் கொண்டு ஆங்கே வழிநின்று அருளுவர்**
**தாயில் கொண்டாற்போல் தலைவன் என்னுள் புக**
**வாயில் கொண்டு ஈசனும் ஆளவந்தானே**

இவ்வுடலில் தாய்வீடாக சிவம் வீற்றிருக்கையால், பஞ்சபூதத்தின் அமைப்பான இவ்வுடலுக்குள் பஞ்சபூதத் தலைவர்களும் அவரவர் தொழிற்படும் வாயிலில் நின்று உயிருக்கு வேண்டிய அறிவை அளித்தருளுகின்றனர். இவ்வுடல் உண்டான போதே இப்பணிகளை அவரவர் செய்யத் தொடங்கினர்.

**நான்முகன் – மண் – மூக்கு – மணம் அறியும்**
**திருமால் – நீர் – நாக்கு – சுவை அறியும்**
**உருத்திரன் – தீ – கண் – ஒளி அறியும்**

**மகேசுரன் – காற்று – தோல் – ஊறு (பரிசம்) அறியும்**

**சதாசிவன் – ஆகாயம் – செவி – ஓசை அறியும்**

இப்படி இவ்வுடலாகிய புனித நகரத்தை நடமாடுங்கோயிலை, நாடி நரம்புகள் தொடங்கி, தசவாயுக்கள், கோள்கள், பஞ்சபூதத் தலைவர்கள் என எத்தனை எத்தனை ஆளுகைக்கு உட்படுத்தப்பட்டு அருளாட்சி நடத்தப்படுகிறது என்பதை மேற்கூறியவற்றிலிருந்து நன்கு உணர்ந்து கொள்ள முடிகிறது. ஆகவே, நாம் செய்யக்கூடிய ஒவ்வொரு செயலும் உறவினர்க்கும், நண்பருக்கும் மற்ற உலகியலார்க்கும் வேண்டுமானால் தெரியாமல் போகலாம் அல்லது மறைத்து வைக்கலாம். ஆனால், நம் உடம்பிலேயே வாழும் ஐந்தொழில் செய்யும் தேவர்க்கு தெரியாமல், நவக்கிரகம் என்னும் கோள்களுக்குத் தெரியாமல் மறைத்து வைக்க முடியாது. ஒவ்வொரு செயலும், சொல்லும் அவ்வப்போதே நமது சித்தம் என்ற அந்தக்கரணத்தில் ஒலிப்பதிவோடு ஒளிப்பதிவும் செய்யப்படுகின்றன என்பதை நினைவில் கொள்ள வேண்டும். ஆகவே, நமது எண்ணம், சொல், செயலில் கவனம் தேவை.

இவ்வுடலின் ஒவ்வொரு இயக்கத்தையும் சற்று உள்நோக்கி ஆய்ந்து பார்த்தால், அற்புதமாக அதிசயமாக நடைபெறுகின்றன என்பதை உணரமுடியும். இத்தனை செயல்பாடுகளையும் நாம் அறிய முடியாமலேயே எத்துணைப் பேராற்றல் மிக்கவர்கள் அவரவர் தத்தமக்குரிய செயல்களை, பணிகளை இவ்வுடலுக்குள் நின்று நிலைபெறச் செய்து வருகின்றனர். சமுதாய வாழ்க்கை, கல்வி, கோயில், போக்கு வரத்து, நதிகள், உணவு உற்பத்தி, சுத்திகரிப்பு, கழிவை வெளியேற்றுதல், காவல் என ஒன்று விடாமல் எல்லாத் துறைகளும் இவ்வுடலினுள் உள்ளன.

மேற்கூறிய செயல்கள் அனைத்தும் ஒரு நகரத்தில் தவறாமல் நடப்பதைப் போலவே, கோயில் நகரமாகிய, நடமாடுங் கோயிலாகிய, பிரம்மபுரமாகிய இறைவன் வாழும் நகரமாகிய, ஆன்மா வாழும் இவ்வுடலிலும் நடைபெறுகின்றன என்று நம் முனிவர்கள் அக்காலத்திலேயே அருளியுள்ளனர்.

நமது முனிவர்கள் அறிவியலின் துணை இல்லாமலேயே இதனை உணர்ந்து அறிந்து உள்ளதை உள்ளவாறே கூறி இருப்பது வியக்கத்தக்கதே. உலகில் இறைவன் அருளாட்சி நடத்தி இயக்குவதைப் போலவே ஆன்மாவின் உள்ளிருந்தும் எல்லா தத்துவங்களையும் இயக்குவிக்கிறார். பேசவைத்து, நடக்க வைத்து, ஓடவைத்து உழைக்க

வைத்து, உண்ண வைத்து, உறங்க வைக்கிறார். நல்வினை தீவினைகளை சித்தம் என்னும் அந்தக்கரணத்தில் பதிய வைக்கிறார். அதற்கேற்ப எந்த நேரத்தில், எந்த இடத்தில், எந்த வயதில், எந்த வினையின் விளைவால், இன்ன செயலின் முடிவால் அதுவும் எதனால் நிகழ்த்தப்பட வேண்டுமோ அதனால் அணுவளவும் பிசகாமல் நிகழ்ந்து அக்கணமே பலன் கொடுக்குமாறு அருளரசு நடத்துகிறார்.

சாதாரணமாக ஒரு சமுதாய மாற்றத்திற்குக்கூட தனி மனித ஒழுக்கம் மிக முக்கியம் என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்றே. அதுபோல், கோயில் நகரமாகிய இந்த தேகத்தில் அனேக செயல்பாடுகள் தன்னிச்சையாக நடந்தபோதிலும் ஒவ்வொரு ஜீவனின் கடமை என்ன?

இம்மனிதப் பிறப்பில் நாம் பெறவேண்டிய தலைப்பட்ட செல்வம் என்பது சிவந்திகழ் ஞானமும் அதனால் பெறுகின்ற பேறுமேயன்றி உலகப் பொருட்களல்ல. ஏனெனில், பொருட் செல்வம் பூரியார் கண்ணும் (இழிந்தவரிடத்தும்) உளது என்கிறது திருக்குறள். "இங்கு இருக்கின்ற ஒன்றையும் பொருளாகக் கொள்ளாதீர்கள்" என்கிறார் நம் பெருமானார்.

எனவே, கிடைக்காத பொருளிடத்து ஆசையும், ஆசை தடைபட்ட இடத்து கோபமும், ஆசைப்பட்ட பொருளுக்கு உரிமையாளர் அறிந்தால் என்செய்வாரோ என்ற அச்சமும், அச்சம் காரணமாக எழும் துக்கமும், பெருமை உடையாரது செல்வத்தைக் கண்டு பொறாமையும் போன்ற குற்றங்களை அடையாதிருத்தல் வேண்டும்.

மேலும் பிறர் குற்றங்களை மட்டும் பேசி, எவ்வாற்றானும் தன்னை உயர்த்திக் கொள்ளவே முடியாது. ஞானம் என்பது ஊனம் சிறிதும் இல்லா ஒழுக்க நெறி. பிறருக்குக் கேடு உண்டாகும்படி பேசுதலும்; தன் தகுதிக்கும், செய்கைக்கும், எண்ணத்திற்கும் பொருந்தாத புகழினை விரும்புதலாகிய சிறுமையும் ஆகிய இவை ஞான ஒழுக்கத்திற்கு மாறானதாகும். இவ்வாறு தேவிகாலோத்தரம் என்ற நூல் நாம் நன்னெறிகளைக் கடைப்பிடித்து ஒழுக உத்தரம் அளிக்கிறது.

ஆக, தேகமே கோள்களின் இருப்பிடமாகவும், பஞ்ச பூதங்களின் வாசஸ்தானமாகவும் எல்லாவற்றிற்கும் மேலாக அருட்பெருஞ்ஜோதி இறைவன் அருளாட்சி செய்யும் ஆலயமாகவும் திகழ்வதால் நம் பெருமானார் இத்தேகம் முதலான தத்துவங்களை எப்படி இயக்க வேண்டும் என்று திருவருட்பா வசனபாகத்தில் வரையறுத்துக் கூறியுள்ளார். இதையே நாம் காணவிருக்கிறோம்.

*நன்மை தீமை என்பவை யாவை? நன்மை தீமை யென்பவை புண்ணிய பாவம். புண்ணியமென்பது ஆரம்பத்தில் செய்வதற்கும் அனுபவிப்பதற்கும் முயற்சிப்பதற்கும் துக்கமாயும், பின் சுகமாயும் விளங்கும். பாவமென்பது ஆரம்பத்தில் சுகமாயும் பின் துக்கமாயும் இருக்கும். புண்ணிய பாவங்கள் எவ்வாறு நம்மை வந்து அடைகின்றன? மனம், வாக்கு, உடல் என்னும் மூன்றினாலும் நம்மை வந்தடைகின்றது. மேலும், மனத்திடத்தில் நால்வகையும், வாக்கினிடத்தில் நால்வகையும், சரீரத்தினிடத்தில் நால்வகையும் ஆகப் பன்னிரண்டு வகையாய் நம்மையடையும். அவை பின்வருமாறு.*

**மனத்தினால் வரும் பாவம்.**

- *பிறர் மனைவியை தனதாக நினைத்தல்*
- *அன்னியருடைய சொத்தை கிரகிக்கநினைத்தல்,*
- *அன்னியருக்குத் தீங்குசெய்ய நினைத்தல்,*
- *முடியாத காரியங்களை நினைத்து அக்காரியம் அன்னியர்களுக்கு முடிந்ததை நினைத்துப் பொறாமையடைதல்.*

**வாக்கினால் வரும் பாவம்.**

*பொய்சொல்லல், புறங்கூறல், கோட்சொல்லல், வீணுக்கழுதல்*

**தேகத்தினால் வரும் பாவம்**

- *பிறர் மனைவியை தழுவுதல்*
- *புசிக்க தகாத வேத விரோத ஆகாரங்களைப் புசித்தல்.*
- *அன்னியர்களை இம்சை செய்தல்,*
- *தீங்குசெய்கின்றவர்களைத் தடுக்காமல் அவர்களுக்கு உபகாரஞ் செய்தல்,*

*மனம், வாக்கு, உடலால் வந்தடையும் முன்சொன்ன 12 பாவச் செயல்களைத் தவிர்த்துப் புண்ணியம் செய்யவேண்டும்.*

**மனத்தினால் வரும் புண்ணியம்**

- *அன்னியர்களுக்கு நன்மை உண்டாக நினைத்தல்.*
- *பொறாமை அடையாதிருத்தல்.*
- *அன்னியர் சொத்தைத் தனதாக்க எண்ணாதிருத்தல்.*
- *தனது மனைவி தவிர அன்னியமான பெண்களை தாய் சகோதரி முதலியவர்களாகச் சிந்தித்தல்.*

**வாக்கினால் வரும் புண்ணியம்**

*பொய்சொல்லாமை, கோட்சொல்லாமை, இன்சொல்லாடல், தோத்திரம் செய்தல்.*

## தேகத்தினாலுண்டாகும் புண்ணியம்

*அன்னியர்களுக்கு தீங்குண்டாகுங்கால் விலக்கல் முதலிய நன்மையான கிருத்தியங்கள் செய்தல். இவை தேகத்தால் உண்டாகும் புண்ணியம்.*

*அதோடல்லாது, இந்திரிய ஒழுக்கம், கரண ஒழுக்கம், ஜீவ ஒழுக்கம், ஆன்ம ஒழுக்கம் என்ற ஒழுக்க நெறிமுறைகளையும் வகுத்துக் கொடுத்துள்ளார் நம் பெருமானார். திருமூலர் சித்தரின் பாடல் ஒன்று பின்வருமாறு கூறுகின்றது.*

**கண்காணி இல்லென்று கள்ளம் பல செய்வார்**
**கண்காணி இல்லா இடம்இல்லை காணுங்கால்**
**கண்காணியாகக் கலந்தெங்கும் நின்றானைக்**
**கண்காணி கண்டார் களவொழிந் தாரே**

*அதாவது, "அறிவில்லாதவர்கள்தான் தங்களை உடனிருந்து காவல் புரிபவன் எவனும் இல்லை என்று கருதிக் கொண்டு தவறான செயல்கள் பலவற்றைச் செய்கின்றனர். ஆனால், யாவரையும் உடனிருந்து காவல் புரிகின்ற ஒருவன் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கிறான்; அவன் இல்லாத இடம் இல்லை என்பதே உண்மையாகும். இவ்வுண்மையை யாரொருவர் உணர்கின்றாரோ அத்தகையோர் ஒருபோதும் தவறான செயல்களைச் செய்யாது இருப்பர்" என்பதாம்.*

*இக்கட்டுரையின் வாயிலாக இவ்வுடல் என்பது எங்கும் பூரணராகி விளங்குகின்ற தனித்தலைமைப் பெரும்பதியாகிய அருட்பெருஞ்ஜோதி இறைவனால் மனித வாழ்க்கைக்கு கட்டிக் கொடுக்கப்பட்ட ஒரு சிறிய வீடு எனத் தெளிந்தோம். இத்தேகமே இறைவன் அரசாட்சி நடத்தும் இடம் என்பதையும் உணர்ந்தோம். இத்திருவருள் கருணையால் நம்மை புண்ணிய பாவங்கள் வந்தடையும் வழிவகைகளையும் நன்கு குற்றமறக் கற்றுணர்ந்தோம். எனவே, இதுதொடங்கி வள்ளல் வகுத்துக் கொடுத்த திருநெறியாம் அருள் நெறியாகிய சுத்த சன்மார்க்க நெறியில் வாழ்ந்து எல்லா வளமும் நலமும் பெறுவோமாக!*

**திருச்சிற்றம்பலம்**

ஆன்மாக்களெல்லாம் இயற்கை உண்மை ஏகதேசங்கள். இயற்கை விளக்கமாகிய அருள் அறிவுக்கறிவாய் விளங்குவதற்கு ஒற்றுமை உரிமை இடங்கள். அந்த ஆன்மாக்கள் ஜீவர்களாகி அதிகரிப்பதற்குப் பூதகாரிய தேகங்களே உரிமையாக இருக்கின்றன. அந்தத் தேகங்களில் ஆன்மாக்கள் ஜீவர்களாகி அதிகரியாவிடில் ஆன்ம விளக்கம் மறைபடும். அதனால், அருள் விளக்கம் வெளிப்படாது. அப்போது மூடம் உண்டாகும். அதுவே ஆன்மாக்களுக்கு பந்தம். அதுபற்றி அவசியம் பூதகாரிய தேகம் வேண்டும். - வசனபாகம்

# கோசாலை

அன்பு உள்ளங்களே!

உயிர்கள் மீது நாம் தயவு காட்டும்போதுதான் இறைவன் நம்மீது தயவு காட்டுவார். அதனால்தான் ஜீவகாருண்யமே கடவுள் வழிபாடு என்றார் வள்ளல் பெருந்தகை. அந்த வகையில் நமது திருவண்ணாமலை சன்மார்க்க சங்கத்தில் பசுக்களை வைத்து பராமரித்து வருகின்றோம்.



தயவுள்ளம் கொண்டவர்கள் தங்களால் இயன்ற அளவு பொருளுதவி செய்து பசு பராமரிப்பிற்கு உதவலாம்.

பசு பராமரிப்பிற்கு உதவ விரும்புவோர்
கீழ்கண்ட அலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளவம்.

தொடர்புக்கு: **98940 10007**

## வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு

நமது தருவண்ணாமலை சன்மார்க்க சங்கத்தின் சார்பாக வெளியிடப்படுகின்ற வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு மாதஇதழில்

- திருஅருட்பிரகாச வள்ளல் பெருமானார் மற்றும் ஞானியர்களின் ஆன்மீக உபதேசங்கள் அடங்கிய கட்டுரைகள்
- ஆன்மீக சந்தேகங்களுக்கான தெளிவுரைகள்
- சன்மார்க்க நிகழ்வுகள்
- யோக தியான பயிற்சி வகுப்புகள் ஆகியவற்றின் தகவல்களை அறிந்துகொள்வதற்கு சந்தாதாரராகி பயனடையுங்கள்.

ஆண்டு சந்தா
**ரூ.120**

உங்களின் நண்பர்கள் மற்றும் உறவினர்களும் இந்த ஞான கருத்துக்களை அறிய அவர்களையும் சந்தாதாரராக்கி பயனடையச் செய்யுங்கள். 5 வருட சந்தா ரூ.600/– தொடர்புக்கு: **98940 10007**

www.vallalarmission.org

vallalartrust@gmail.com

www.facebook.com/vallalarmissic



Vallalar Sanmarga Gnanamurasu, Tamil Monthly January 2022, RNI TNTAM/2007/21626 DRO.R.C./C3/74857/05
PR No.TRL/11/2020-2022 Posted at Tiruvannamalai on 16th & 17th of every month,
WPP License No. TN/PMG(CCR)/WPP 582/20-22 (Valid upto 31.12.2022)
Published on 15th of every month, Printed pages 28 ( including 4 cover pages).

ஞானசபை என்பது ஆகாமப்பிரகாசம். அந்தப் பிரகாசத்திற்குள் இருக்கும் பிரகாசம் கடவுள். அந்த உள்ளொளியின் அசைவே நடனம். இவற்றைத்தான் சித்சபை அல்லது ஞானசபை என்றும், நடராஜர் என்றும், நடனம் என்றும் சொல்லுகின்றது.

சாதி சமயச் சழக்கெலாம் அற்றது
சன்மார்க்க ஞான சபைநிலை பெற்றது
மேதினியிற் சாகா வித்தையைக் கற்றது
மெய்யருட் ஜோதிஎன் உள்ளத்தில் உற்றது

- திருஅருட்பா

திரு/திருமதி

TIRUVANNAMALAI - HO - 606601. POSTAGE FEE COLLECTED

Redirect to : அருள்திரு பாபு சாது
சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்
552/6A, வாயுங்கம் எதிரில், கிரிவலப்பாதை, கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை (Po),
திருஅண்ணாமலை - 606 604. Cell : 94434 89849, 99427 76351

பசித்திரு! தனித்திரு! விழித்திரு!